**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கந்தர்வக்கோட்டை**

**OS No.54/2025**

**வாதிகள் தரப்பு 1 வது சாட்சி அழகு** என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திரு.அரவிந்த், பெஞ்ச் கிளார்க் (பொறுப்பு) என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

## Chief Examination of PW.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அழகு | வயது | : | 46 |
| கணவர் பெயர் | : | செல்வராஜ் | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | நாட்டாணி | தொழில் | : | விவசாயம் |

நாள் : 16.02.2026

<u>முதல் விசாரணை</u>

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் முதல் விசாரணை நிரூபண பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்திருக்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னிடம் படித்து காண்பித்தார்கள். அதில் உள்ள விபரங்கள் உண்மையானது.

1) 22.09.2025 தேதியிட்ட வசந்தா என்பவரின் இறப்புச்சான்றிதழ் கணினி பதிவிறக்க சான்றிட்ட நகல் - வா.சா.ஆ.1

2) 12.04.2000 தேதியிட்ட கண்ணன் என்பவரின் இறப்புச்சான்றிதழ் அசல் - வா.சா.ஆ.2

3) 17.02.2014 தேதியிட்ட சம்மந்தம் என்பவரின் இறப்புச்சான்றிதழ் சான்றிட்ட நகல் - வா.சா.ஆ.3

4) 04.11.2020 தேதியிட்ட சின்னப்பொன்னு என்பவரின் இறப்புச்சான்றிதழ் கணினி பதிவிறக்க சான்றிட்ட நகல் - வா.சா.ஆ.4

5) 02.01.2021 தேதியிட்ட சம்மந்தம் என்பவரின் வாரிசுச்சான்றிதழ் கணினி பதிவிறக்க சான்றிட்ட நகல் - வா.சா.ஆ.5

6) 1ஆம் வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் - வா.சா.ஆ.6

7) 2ஆம் வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் - வா.சா.ஆ.7

8) 3ஆம் வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் - வா.சா.ஆ.8

9) 4ஆம் வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் - வா.சா.ஆ.9

10) 17.10.2025 தேதியிட்ட வாரிசு சான்றிதழ் கோரிய விண்ணப்ப மனு கணினி பதிவிறக்க நகல் - வா.சா.ஆ.10

11) 17.10.2025 தேதியிட்ட வாரிசு சான்றிதழ் கோரிய விண்ணப்ப மனு, 1ஆம் பிரதிவாதியால் நிராகரிக்கப்பட்டதற்கான உத்தரவு கணினி பதிவிறக்க நகல் - வா.சா.ஆ.11

**பிராதுப்படி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.**

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**1)** இறந்து போன வசந்தா என்பவருக்கு நாங்கள் தான் வாரிசுகள் என்று கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். இறந்து போன வசந்தா என்பவரின் கணவர் கண்ணன் என்பவர் சென்னம்பட்டி கிராமத்தினைச் சேர்ந்தவர் என்றால் சரியல்ல, அவர் தஞ்சாவூரைச் சேர்ந்தவர் ஆவார். வா.சா.ஆ.2 கண்ணனின் இறப்புச்சான்றிதழில் அவரது மனைவி பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எனது தந்தை சம்மந்தம் என்பவர் கடந்த 2001 ஆம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தந்தைக்கு 2021 ஆம் ஆண்டு, வாரிசுசான்று பெற்றுள்ளோம் என்றால் சரிதான். எங்களைத்தவிர வசந்தா மற்றும் கண்ணனுக்கு வேறு வாரிசுகள் உள்ளார்கள் என்றாலும் அதனை மறைத்து நாங்கள் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நாங்கள் சரியான தகவலை கொடுத்திருந்தால் 1ஆம் பிரதிவாதி வாரிசு சான்று வழங்கியிருப்பார் என்றால் சரியல்ல. நாங்கள் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.02.16 15:50:16 +0530

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கந்தர்வக்கோட்டை**

**OS No.54/2025**

**வாதிகள் தரப்பு 2 வது சாட்சி ஆறுமுகம்** என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திரு.அரவிந்த், பெஞ்ச் கிளார்க் (பொறுப்பு) என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

## Chief Examination of PW.2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆறுமுகம் | வயது | : | 48 |
| தந்தை பெயர் | : | தர்மராஜ் | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | நாட்டாணி | தொழில் | : | விவசாயம் |

நாள் : 16.02.2026

முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் வாதிகள் தரப்பு சாட்சி ஆவேன். நான் முதல் விசாரணை நிரூபண பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்திருக்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னிடம் படித்து காண்பித்தார்கள். அதில் உள்ள விபரங்கள் உண்மையானது.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1) 1ஆம் வாதி அழைத்ததன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நானும் 1ஆம் வாதியும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 1ஆம் வாதியைத் தவிர மற்ற வாதிகள் வெவ்வேறு ஊர்களில் திருமணம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். இறந்துபோன வசந்தா மற்றும் கண்ணன் ஆகியோருக்கு வாதிகளைத் தவிர வேறு வாரிசுகள் யாரும் இல்லை என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். வாதிகள் எனது உறவினர்கள் என்பதால் , அவருக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.02.16 15:50:31 +0530

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**